**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

**தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017**

**Term Examination, November - 2017**

FWC

| தரம் :- 12 (2019) | இந்து நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| (1) 1 | (11) 3 | (21) 4 |
| (2) 4 | (12) 5 | (22) 5 |
| (3) 5 | (13) 4 | (23) 3 |
| (4) 2 | (14) 3 | (24) 1 |
| (5) 1 | (15) 4 | (25) 5 |
| (6) 3 | (16) 1 | |
| (7) 4 | (17) 5 | |
| (8) 3 | (18) 2 | |
| (9) 4 | (19) 3 | |
| (10) 2 | (20) 2 | |

## பகுதி - II

(1) அ) ✦ ஆரம்பத்தில் வேதங்கள் "திரயீ வித்யா" என மூன்றாகச் சொல்லப்பட்டன. அவை இருக்கு யசுர், சாமம் என்பன ஆகும். பின்னர் வழக்கிலிருந்த அதர்வ வேதமும் இணைக்கப்பட்டு, நான்காகக் கூறப்பட்டன.

✦ வேதங்கள் நான்கு என்பதனால் அவை சதுர்மறை, சதுர்வேதம் என அழைக்கப்பட்டன.

✦ இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது

✦ 101 சாகைகளைக் கொண்ட யசூர் வேதம் கிருஷ்ண யசூர், சுக்கிர யசுர் என இரு பிரிவுகளைக் கொண்டது.

✦ சாமவேதம் 1549 பாடல்களைக் கொண்டுள்ளதுடன் பூர்வ ஆர்சிகம், உத்தர ஆர்சிகம் என்னும் இரு பிரிவுகளையும் கொண்டுள்ளது.

✦ அதர்வண வேதம் 20 காண்டங்களையும் 731 சூக்தங்களையும் 6000 பாடல்களையும் கொண்டுள்ளது

✦ நான்கு வேதங்களும் இரண்டு காண்டங்களையும் நான்கு பகுதிகளையும் உடையன

✦ சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என்பன நான்கு பகுதிகளாக உள்ளன. அவற்றுள் சங்கிதை என்பது மந்திரங்களின் தொகுப்பாகும். பிரமாணம் என்பது வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும். ஆரணியம் என்பது வானஸ்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டாங்களைக் கூறும் உபநிடதம் என்பது உண்மைப் பொருள் பற்றிய விசாரணைகளைக் கொண்டது.

✦ சங்கிதை, பிராமணம் என்பன வேதத்தின் கர்ம காண்டமப் பகுதியைச் சார்ந்தவை.

✦ ஆரணியகம், உபநிடதம் என்பன வேதத்தின் ஞான காண்டப் பகுதியைச் சார்ந்தவையாகும்.

ஆ) இயற்கை வழிபாடு , பலதெய்வ வழிபாடு, ஒரு தெய்வ வழிபாடு (ஏகம் சத்), யக்ஞம், யாகம், உபாசனை முறைகள் வேண்டல், அக்கினி வழிபாடு, எரியோம்பல், மந்திரங்களை உச்சரித்தல், அவிப்பொருள் வழங்குதல், பண்டமாற்று முறை வழிபாடு, இசைவழிபாடு, ஒரு தெய்வத்திற்குரிய பல பெயர் சொல்லி வழிபடுதல் (சதருத்திரியம்)

✦ இல்லறவாழ்வு தொடர்பான சடங்குகள், சமஸ்காரங்கள், உபநயனம், அன்னப் பிராசனம், திருமணக்கிரியைகள் (5 + 5 = 10 புள்ளிகள்)

(2) அ) சமயநெறிகள்

இந்துசமய நெறிகள் அனைத்தையும் பிரதிபலிக்கும் இலக்கியமாக மகாபரதம் அமைகின்றது.
சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, அம்மன், முருக வழிபாடுகள் கூறப்பட்டுள்ளன.
துர்க்கா தோத்திரம் பிரதானமானது சமயக் கலைக் களஞ்சியமானது
ஒவ்வொரு அத்தியாயமும் “ஓம் நமோ நாராயணாய” என்னும் உபாசனையுடன் ஆரம்பிக்கின்றது.
இந்தியா, இலங்கை மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலும் இதன் சமய மரபுகள் செல்வாக்கடைந்துள்ளன.
திருக்கோயில் வழிபாட்டு நெறிகளும் கூறப்பட்டுள்ளன. தலயாத்திரை, விரத அனுஷ்டானம், தவம், பூசை, தோத்திரம், தியானம், பக்திநெறி முதலிய வழிபாட்டு அம்சங்கள் உண்டு.
பகவத்கீதை சமயதத்துவ இணைப்பைக் காட்டுவது.
வைணவ சமய அவதாரக் கோட்பாட்டை வலியுறுத்துகிறது.
பாகவதமரபு, பாகவதபக்தி, இறைநம்பிக்கை, ஆத்ம விடுதலை ஆகியவற்றை விபரிக்கின்றது.
அர்ச்சுனன் தவம் செய்தமை, சிவனருள் பெற்றமை பிரதானமானது.

ஆ) **இலக்கிய மரபுகள்**

மகாபாரதம் வீரகாவியம் எனப் புகழப்படுகின்றது. பல்வகையான இலக்கிய மரபுகளும், சிந்தனைகளும் இந்நூலில் சங்கமமாகியுள்ளன.
மகாபாரத இலக்கியத்தின் ஆரம்பக்கதைகள் பழமையானவை ஆயினும் குப்தர்காலத்தில் இறுதி வடிவம் பெற்றன.
வேதமரபினையும் பிற்காலப் பண்பாடுகளையும் இணைக்கும் வகையில் இலக்கியப் பெருமை பெற்றுள்ளது. இந்திய இலக்கிய வரலாற்றில் காவியம், நாடகம், நாட்டிய நாடகம், நாட்டார் வழக்குக்கதைகள் கூத்து இலக்கியங்கள் ஆகியவற்றுக்கு அடிப்படையான இலக்கியம்.
பல இந்திய மொழிகள் மூலமாகவும் வேறு வடிவத்திலும் வெளிவந்துள்ளது. தென்கிழக்காசியாவில் பாரதயுத்த அர்ச்சுனவிவாக என்னும் இலக்கியங்களிலும் வளர்ச்சியடைந்துள்ளன. கம்சன் கதை, வைகுந்த அம்மானை முதலியவற்றிலும், தேவாரப்பாடல்களிலும் மகாபாரதமரபு பின்பற்றப்பட்டுள்ளது.
(5 + 5 = 10 புள்ளிகள்)

(3) அ) சோழப் பேரரசர்கள் சைவநெறியில் தீவிர ஈடுபாடும் அபிமானமும் கொண்டதால் பேராதரவு வழக்கினர் சிவபாத சேகரன், திருநீற்றுக் சோழன், திரிபுவர்ச் சக்கரவர்த்திகள் போன்ற விருதுப் பெயர்களை சூடியிருந்தமை சைவத்தின் மீது அவர்களின் ஈடுபாட்டையும் பக்தியையும் வெளிப்படுத்துகின்றது. நிலையான ஆட்சியால் நாடு வளம் நிறைந்தமையால் இந்துப் பண்பாடுகள் பல துறைகளிலும் வளர்ச்சி கண்டது.



The National e-learning Portal for The General Education

- ✦ மன்னர்கள் பெற்ற வெற்றிகள் புதிய ஆலயங்கள் அமைப்பதற்கும், பழைய ஆலயங்களை புனருத்தாரணம் செய்வதற்கும் வழி வகுத்தனர்.
- ✦ நடராஜ சின்னம் அரச சின்னமானது ஆலயங்களுக்கு வேண்டிய தானங்களையும்,மானியங்களையும் வழங்கினர் சாசனங்களில் திருப்பணிகளையும், தானங்களையும் பற்றி அறியலாம்.
- ✦ அரசர்களது ஜன்ம நட்சத்திர தினங்களில் சிறப்பான வழிபாடுகளும் இடம் பெற்றன.
- ✦ வேதவிருத்தி, புராண விருத்தி, பாரத விருத்திக்கு மானியங்கள் வழங்கப்பட்டன.
- ✦ நாயன்மார்களுக்கு படிமங்கள், சிவனடியார் குருபூசைகள் சிறப்பாக இடம்பெற்றன.
- ✦ சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்டன. பண்வகுக்கப்பட்டன. ஓதுவார்கள், பிடார்கள் என்போர் பண்ணோடு பாடினார்கள்.
- ✦ திருமுக்கூடல் எனும் இடத்தில் மடங்கள் அமைத்து சைவப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

04) அ) பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் உறுப்பினர்களின் அறிவு நலம், கருத்து நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம் ஆகியவை மென்மேலும் திருந்திய ஒரு நடைமுறையே பண்பாடு.

- அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கம் என்பவற்றின் தொகுதி.
- பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் கற்று அறியப்படும் நடவடிக்கைகள் அனைததையும் குறிக்கும்.

  பண் + பாடு

  நகர் + அகம்

  நகர மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பது நாகரிகம்.
- நாகரிகம், பண்பாடு ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று பின்னிப் பிணைந்தவை. பண்பாடு அகவயமானது, நாகரிகம் , நாகரிகம் அகவயமும், புறவயமுமானது.

ஆ) சனாதன தர்மம், வைதீக தர்மம், இறை உண்மை, இறை நம்பிக்கை ஏற்று வாழ்தல்.

- மானிட ஆற்றலை விட இறை ஆற்றல் மேலானது, சமயம், கலை, தத்துவம் என்பவற்றை வாழ்வியலோடு இணைப்பது..
- அறிவியல், வானியல், சோதிடம், மருத்துவம் போன்ற அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி இருப்பது.
- மண்ணில் நல்ல வண்ணம் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டுவது.
- பிறர் நலம், நெருக்கமான பிரார்த்தனை, விருந்தோம்பல் போன்ற உண்மைகளை வாழ்வின் தர்மமாகப் போற்றுதல்.
- பயன்கருதாத கடமைக்கு முதன்மை அளித்தல் போன்ற சிந்தனைகள். (4 + 6 = 10 புள்ளிகள்)

05) அ) மச்சய புராணம், தர்ம சாஸ்திரம், காமாந்தக நீதிசாரம், மகாபாரதம், இராமயணக் கதைகள்.

- தொல்பொருட் சான்றாதாரங்கள், நாணயங்கள், பொறிப்புக்கள் கோயில் கட்டடங்கள், சாசனங்கள் அலகாபாத் கல்வெட்டுக்கள்.
- நாணயங்கள் - மயில், அன்னப்பறவை, கொடிவேல், மன்னர்கள் பெற்ற விருது, பாகியான், யுவான் சுவாங் குறிப்புக்கள்.

ஆ) ஸ்ரீ குப்தன், கடோற்கஜகுப்தன, சமுத்திரகுப்தன், ஸ்கந்த குப்தன், குமாரகுப்தன்

- அரசர்கள் பிராமணர்களுக்கு தானம் வழங்கியமை.
- கருடசின்னம், அம்மன் வடிவம், அரச சின்னமாக வழங்கியமை. நாணயத்திலும் வடிவமைக்கப்பட்டமை.
- அரசர்கள் தெய்வ அம்சம் பொருந்தியவர்களாகக் குறிப்பிடப்பட்டமை. தேவஸ்ரீ, மகாராஜதிராஜன்.
- இறைபக்தி, அறுவகைச் சமயப் பிரிவு வளர்ச்சி, திருக்கோவில், மரபு வளர்ச்சி, இராம கிருஸ்ண அவதார சிந்தனைகள் முக்கிய இடம் (4 + 6 = 10 புள்ளிகள்)

06) அ) பாடலிபுரத்தை தலைநகராகக் கொண்டது. கி.மு 6ம் நூற்றாண்டு மகதரப் பேரரசை அடிப்படையாகக் கொண்டது.

- வாரணாசி முதல் வங்கதேசம் வரை இந்துப் பண்பாடு பரவியது. சந்திரகுப்த மன்னன் பாடலிபுரத்தை மீட்டுருவாக்கம் செய்தான்.
- அர்த்த சாஸ்திரத்தில் கூறப்படும் கருத்துக்கள்.
- சாம்ராஜ்ய அமைப்பு, சிறப்பான இராட்சிய கட்டமைப்பு.
- சமயம் தழுவிய அரசியல், பொருளாதார வாழ்வு, நீதி பரிபாலனம், பரஸ்பர சமூகஉறவுகள், எல்லோரும் ஒரே குலம்.
- அசோகன் ஆட்சியில் காணப்பட்ட பண்பாட்டுச் சிறப்புக்கள், அகிம்சை, மரக்கறி உணவு, சமயச் சடங்கு. (10 புள்ளிகள்)

07) அ) ஆ – பசு, க – பதி, ம – பாசம் ஆ – பாசம், க – பசு, ம – பதி

ஆ – சிவஞானம், க – மோட்சதானம், ம – மலநாசம் (ஆணவ ஒழுக்கம்)

தொன்று தொட்டு வரும் அறிவு, மலத்தை நாசம் செய்து சிவஞானத்தை அளிப்பது.

1. சைவஆகமம் - சிவாகமம் - 28 சிவபேதம் - 10

   உருத்திரபேதம் - 18

2. வைணவ ஆகமம் - பாஞ்சராத்திரம் வைகாசனம்

   சாக்த ஆகமம் - தந்திரம், விளக்கம்.

ஆ) சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியாபாதம், கிரியாபாதம், யோகாபாதம், ஞான பாதம் என்னும் உட்பிரிவுகளை உடையன.

- சரியா பாதம் :- பிராயச்சித்திவிதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு, உமா மகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம், சிவலிங் இலக்கணம் என்பவற்றைக் கூறுதல்.
- கிரியா பாதம் :- மந்திரடம், உற்சவம், நித்திள, நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்கள் அணியும் முறை பற்றிய கருத்துக்களை கூறல்.
- யோக பாதம் :- அட்டாங்க யோகமும், அட்டமா, சித்திகள், ஆறுவகை ஆதாரங்கள் பற்றிய விளக்கத்துடன் தியானம், செபம், அனுஷ்டானம் போன்ற விதிகளைக் கூறல்
- ஞானா பாதம் :- பதி, பசு, பாசம் போன்றவற்றின் உண்மை, பதியின் இயல்பு ஆன்மாவின் விடு